# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 13 (27-05-1998) புதன்கிழமை UTHAYAN - A lively National Tamil Daily கதிர்: 154


# யாழ். மேயர் நியமனம் குறித்து கூட்டணிக்குள் அதிருப்தி!

## அவசரப்பட்டுவிட்டதாக சில வட்டாரங்கள் கருத்து

கொழும்பு, மே 27

யாழ். மாநகரசபை மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து, அவரது இடத்துக்கு புதிய மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளர் பொ. சிவபாலனை நியமிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்த முடிவு கூட்டணியின் சில வட்டாரங்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகின்றது.

*இந்த நியமன விடயத்தில் கட்சி அவசரப்பட்டுவிட்டதாக அந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.*

*''கட்சியின் தலைவர் எம். சிவசிதம்பரம் இந்தியாவில் தங்கியுள்ளார். அண்மைக் காலத்தில் கட்சியின் யாழ்ப்பாண நடவடிக்கைகளை முன்னெடுத்த முக்கிய பிரமுகர்களுள் ஒருவரான மாவை சேனாதிராஜாவும் இந்தியாவில் நிற்கின்றார்.*

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினமிரவு மோட்டார் தாக்குதல் மேற்கொண்டனர். இரவு 6.45 முதல் 7.30 வரை இடம்பெற்ற இத்தாக்குதலின் போது எட்டு மோட்டார் ஷெல்கள் முகாம் வளவிற்குள் வீழ்ந்து வெடித்தன. இராணுவத்திற்கு சேதங்கள் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

## அமைச்சரவை ஆராயும்

கொழும்பு, மே 27

வடக்கு — கிழக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலானா இது விடயமாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கவிருப்பதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## வன்னியில் மாறி மாறி ஷெல் தாக்குதல்கள்!

வவுனியா, மே 27

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினரும், விடுதலைப் புலிகளும் மாறி மாறி மோட்டார் தாக்குதல்களை நடத்துவதாக வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் ஆரம்பமான இத்தாக்குதல்கள் நேற்றிரவு வரை தொடர்ந்த வண்ணம் இருந்ததாகவும் — ஷெல் அதிர்வுகள் வவுனியா வரை கேட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேதம் குறித்து தகவல் கிடைக்கவில்லை. (உ-3)

## ஆனைக்கோட்டையில் நேற்றுப் பகல் மோதல்

யாழ்ப்பாணம், மே 27

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் நேற்றுக் காலை 8-15 மணியளவில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், கிரனேட் வெடிப்புச் சத்தங்களும் கேட்டன. எனினும் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து விவரமான தகவல்கள் கிடைக்கவில்லை.

புலிகள் நடமாடுவதாகக் கிடைத்த தகவல்களின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலை ஆணையர் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலை ஒன்றை அமைப்பதற்கான இடம் மற்றும் ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக சிறைச்சாலை சிரேஷ்ட ஆணையாளர் கரலியத்த, சிறைச்சாலை ஆணையாளர் பாஸ்கரசிங்கம் மற்றும் நீதியமைச்சின் சில உயரதிகாரிகள் இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்றார்கள்.

சுமார் ஐந்நூறு கைதிகளை தடுத்து வைக்கக் கூடியதான சிறைச்சாலை ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை அவர்கள் கவனிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது யாழ். பிரதான வீதியில் தற்காலிக சிறைச்சாலை ஒன்று இயங்குகின்றது. அங்கு அறுபது கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 13 பேர் இராணுவத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பரீட்சை முடிவு இன்று

கொழும்பு, மே 27

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.எம்.ஆர்.சி. அமரக்கோன் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கு 5 லட்சத்து 87 ஆயிரம் பேர் தோற்றியிருந்தனர். (உ-3-6)

## வடமராட்சியில் இரவில் சோதனை

யாழ்ப்பாணம், மே 27

வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தினரின் இரவுச் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சியில் தினமும் இரவு 9 மணி முதல் 11 மணி வரை வெவ்வேறு இடங்களில் வீடுவீடாகச் சென்று படையினர் சோதனைகளை மேற்கொள்ளுகின்றனர். (உ-15)

## வடமராட்சிப் பெண் கொழும்பில் கைது!

கொழும்பு, மே 27

கொழும்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிப் பகுதியில் நடமாடிய வடமராட்சியைச் சேர்ந்த பெண் ஒருவரைப் பொலீஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

வடமராட்சியில் இருந்து லெப்டினன்ட் கேணல் ஒருவருடன் இந்தப் பெண் கொழும்புக்கு வந்து அவரது வீட்டில் தங்கியிருந்தார் என்றும் —

பின்னர் அவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார் என்றும் — அதன் பின்னர் இந்தப் பெண் வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்புப் பகுதிகளில் நடமாடியதாகவும் — தெரிவிக்கப்பட்டது. [உ-10-3]

## அகதிகளை ஏற்றி வந்த பஸ் விபத்தில் சிக்கியது

### செட்டிகுளத்தில் சம்பவம்

வவுனியா, மே 27

மன்னாரில் இருந்து திருகோணமலைக்கு யாழ்ப்பாணம் திரும்பும் அகதிகளை ஏற்றிச் சென்ற பஸ் நேற்றுக் காலை செட்டிகுளத்தில் விபத்துக்குள்ளானதில் 4 அகதிகள் காயமடைந்தனர்.

மன்னார் பேசாலை அகதி முகாமில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் அகதிகளை ஏற்றிக்கொண்டு ஐந்து பஸ்கள் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டன.

செட்டிகுளம் பறையனாளங்குளத்தில் அந்த பஸ்களில் ஒன்று கொழும்பில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் சீனாவில்

பீகிங், மே 27

சீனா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சீனாப் பிரதமர் யூ. லோக் வீயுடன் பேச்சுக்கள் நடத்தினர். (உ-3)

## கிருஷாந்தி கொலை வழக்கு:

## மற்றோர் எதிரியும் தப்பியோட முயற்சி!

கொழும்பு, மே 27

கைதடி மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் மூவர் படுகொலைச் சந்தேக நபர்களில் ஒருவரான — சிப்பாயான — ராஜபக்ச என்பவர் சிறைச்சாலை அதிகாரிகளின் கண்காணிப்பிலிருந்து தப்பி ஓட — நேற்று மாலை எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

அவிசாவளை நீதிமன்றத்தில் ஒரு வழக்குக்காக அழைத்துச் செல்லப்பட்ட அவர், வழக்கு விசாரணை முடிந்து நேற்று மாலை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டார்.

சிறைச்சாலை வாசலில் அவர் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்ட சமயம் அவர் தப்பி ஓடினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தெகிவளையில் நடந்த:

## ரயில் குண்டு வெடிப்பு: 7 தமிழர்கள் மீது வழக்கு

கொழும்பு, மே 27

1996 ஜூலையில் 63 பேரை பலிகொண்டு 275 பேருக்குக் காயம் விளைவித்த தெகிவளை ரயில்வே நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகச் சட்ட மா அதிபர் திணைக்களம் 7 பேருக்கு எதிராக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர் சிலை கொள்ளை

கொழும்பு, மே 27

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களைக் கைது செய்ய வந்துள்ளோம் என்று கூறி புத்தர் சிலை ஒன்றைக் கோஷ்டி ஒன்று களவாடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கிரிமட்டிவாய என்னும் இடத்தில் உள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உதவும் நாடுகளின் கூட்டம் நேற்று ஆரம்பம்

பாரிஸ், மே 27

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நேற்று பாரிஸில் ஆரம்பமானது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்றுள்ள நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இந்த வருடம் 70 கோடி அமெரிக்க டொலர் உதவி கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையி... ...ரும் இன்றைய நா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தம்

நேற்றைய உதயனில் இடம்பெற்ற திருமதி பானு கந்தவனச்செல்வன் அவர்களின் கண்ணீர் அஞ்சலியில் ''அகால மரணம்'' என்பதை ''திடீர் மரணமென'' மாற்றி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.

'97' பிரத்தியேக வகுப்பு மாணவர்கள்

(56326)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வைரவிப்பிள்ளை மாணிக்கம்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த வை. மாணிக்கம் என்பவரது இறுதிக்கிரியைகள் 27-05-98 இன்றுபுதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு (புதிய நேரம்) நடைபெற்று தகனக்கிரியைகள் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
Dr. மா. ரவீந்திரன்
மா. ரஜீந்திரன்
(பிள்ளைகள்)

461 (305), நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(56324)

## திருமதி அருளம்மா அந்தோனிப்பிள்ளை

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அருளம்மா அந்தோனிப்பிள்ளை 25-05-1998 அன்று இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பிலோமினா, மேரிஜசிந்தா, பிலிப்தவரத்தினம் (ஜேர்மனி), ஜெயரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஜோர்ஜ், சூசைப்பிள்ளை, பொசாறி (ஜேர்மனி), றூபினா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 26-05-1998 அன்று நடைபெற்று பூதவுடல் இளவாலை புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
G A டயஸ் (பேரன்)
(3ஆம் வருட கலைப்பீட மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்)

(56317)

## கந்தையா சிதம்பரநாதர்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிதம்பரநாதர் 22 – 05 – 98 இல் சிவபதமெய்தினார்.

இவர் காலஞ்சென்றவர்களான இராகுநாதன் கந்தையா (ஆசிரியர்), கந்தையா அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கார்த்தியேசு சுப்பிரமணியம் (மத்திய வங்கிக் கணக்காளர்) காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகமுத்து ஆகியோரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நாதஸ்வரன் (கனடா), சத்தியசோதி (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவி, 1ஆம் வருடம் N.D B.S) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அருள்மதியின் (கனடா) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஆசிரியர்), சிவகுருநாதர் (ஓய்வூதியர்–CTB) காலஞ்சென்ற நேசரத்தினம், யோகசுந்தரம் (கைதடி) சொர்ணலிங்கம் (சவூதி), காலஞ்சென்ற இரதிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜெகதீஸ்வரியின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27–5–98) புதன்கிழமை காலை 10.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கைதடி ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சிதம்பரநாதர் நாதஸ்வரன்
(மகன்)

கைதடி மேற்கு, கைதடி.

(56315)

## பானு கந்தவனச்செல்வன்

திருமதி பானு கந்தவனச்செல்வன் Bsc. 24-5–98 அன்று காலமானார்.

அன்னார் கந்தவனச்செல்வன் அவர்களின் (நாவாந்துறை யா/றோ. க. வித்தியாலய ஆசிரியர்) அன்பு மனைவியும், Dr. பேரானந்தன் (நவாலி வைத்திய சாலை) காலஞ்சென்ற ஜெயராணி பேரானந்தன் (முன்னாள் ஆசிரியை, தாவடி த. இ. க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மகளும், திரு. திருமதி நடராஜா (தையிட்டி) ஆகியோரின் பாசமிகு மருமகளும், திருமதி கீதா-லிங்கேஸ்வரன், லதா (ஆசிரிய மாணவி, கலாசாலை, பலாலி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், கந்தையாலிங்கேஸ்வரன் (தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), திருமதி சதானந்தன், செந்தமிழ் செல்வி (கனடா), கலைச் செல்வி, காலஞ்சென்ற கலைச் செல்வன், இசைச் செல்வன் (U. K.) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-5–98 அன்று தாவடியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. பொ. பேரானந்தன்
(தந்தை)

'ஜெயசனம்'
தாவடி.

(56304)

## விளையாட்டு

நல்லூர் ஞானோதயா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம், நல்லூர் ஆகியவற்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். காங்கேயன் கலந்து கொள்வார்.

இந்த மெய்வல்லுநர் போட்டி கடந்த 15ஆம் திகதி வெள்ளி நடைபெற இருந்து கடும் மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது. (இ)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்:
27 - 05 - 98 புதன்
அகல வெண் திரையில்
அர்ஜுன் - ரஞ்சிதா
நடித்த
ஜெய்ஹிந்த்
காட்சி:– 10-30, 2–30

(56316)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
புதன், வியாழன்
மோகன், அமலா, ராதா
நடித்த
மெல்ல திறந்த கதவு
நேரம்:– 10-30, 2-30
(பழைய நேரம்)
சனி மட்டும்
TITANIC
Part I & II
(மாணவர்கள், பெண்கள் பார்க்கவேண்டிய உண்மைக் கதை)
Tele. No. 070 - 212223

(56294)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கார்த்திக், சௌந்தர்யா
நடித்த
பொன்னுமணி
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் படம் காண்பிக்கப்படும் ஒரே படமாளிகை.

(சி/3830)

## சிவா திரையில்

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
அப்பாஸ் - கௌசல்யா
ஜாலி
(புதிய வெளியீடு)
தினசரி 10–30 — 2-30
(பழைய நேரம்)

(56328)

யாழ்.
## றீகல் வெண் திரையில்

25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
காட்சி:- 10-30 — 2–30
முரளி, சூர்யா, ரசிகா
மணிவண்ணன்
நடித்த
காதலே நிம்மதி
(நேரடி CD யில்)
அடுத்த வெளியீடு
அனைவரின்
வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் பாட்ஷா
(நேரடி CD யில்)
தினசரி 5 மணிக்கு
ஆங்கிலத் திரைப்படம்
காண்பிக்கப்படும்.

(56329)

## பொருள்கள் இறக்கும் பணி துரிதம்

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் லங்கா முடித கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இக்கப்பலில் 1,450 மெற்றிக்தொன் அரிசியும், 600 மெற்றிக் தொன் சீனியும், 200 மெற்றிக்தொன் பால் மாவும் எடுத்து வரப்பட்டுள்ளது. (உ-3)

## THE JAFFNA REHABILITATION & RESETTLEMENT PROGRAMME

In order to address an urgent requirement for vehicies JRRP would like to invite organisation who can:
Supply Vehicles, Drivers & Support Staff
to register their interest and be included on the tender by submitting their details to:

United Nations Development Programme,
123/1, Temple Road, Jaffna.

(56321)

## UNDP WANTED COOK

மேலைத்தேய, உள்நாட்டு சமையலில் அனுபவமும் தேர்ச்சியும் உள்ளவர்கள் வேலை நேரத்தில் நேரில் வரவும். ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

121, A கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(56320)

## கண்ணீர் அஞ்சலி

ரமணி பத்மநாதன்
(சட்ட ஆலோசகர், மக்கள் வங்கி)

எமது யாழ்ப்பாணம் பிரதேச அலுவலகத்தில் சட்ட ஆலோசகராகக் கடமையாற்றியவரும், தற்போது மட்டக்களப்பு மக்கள் வங்கிப் பிராந்திய அலுவலகத்தில் சட்ட ஆலோசகராகக் கடமையாற்றியவருமான

திருமதி ரமணி பத்மநாதனின்

மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.

வடபிராந்திய
மக்கள் வங்கி ஊழியர்கள்.

(56323)

## ஈமக்கிரியைகள் பற்றிய அறிவிப்பு

## திருவிளங்கம் செல்வச்சந்திரன்

25 — 05 — 1998 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று அறிவிக்கப்பட்ட புத்தூரை வசிப்பிடமாகக் கொண்ட திருவிளங்கம் செல்வச்சந்திரன் அவர்களின் ஈமக்கிரியைகள் 27 — 05 — 1998 இன்று இந்தியாவில் நடைபெறும் என அறியத்தருகின்றோம்.

— உறவினர்கள்

(56307)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



## கதிரவேலு நம்பிராஜா

(நாதஸ்வர வித்துவான், இசைஞானவாரிதி)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று பருத்தித்துறையில் நடைபெறும்.

நீங்கள் மறைந்து 90 நாள்கள் பறந்தோடிப் போனாலும் என்றும் உங்கள் நினைவுடன் வாழும்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

'' திருப்பதி '',
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(சி/3847)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோனேசியாவில்

# அரசியல் கைதிகளை விடுவிக்க புதிய அரசாங்கம் நடவடிக்கை

ஜகார்த்தா, மே 27

முன்னாள் இந்தோனேசிய அதிபர் சுகார்ட்டோவால் சிறையிடப்பட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களை விடுதலை செய்ய ஹபீபி அரசு முடிவு செய்துள்ளது.

இத்தகவலை இந்தோனேசிய நீதித்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக நேற்றுமுன்தினம் இரு அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

### உலக அரங்கில்

வெகு விரைவில் இந்தோனேசியாவில் புதிய அதிபர் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்போவதாக ஹபீபி நாட்டுமக்களுக்கு வாக்களித்துள்ளார்.

(இ-8)

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

மேரிலாந்து, மே 27

'இந்தியாவிற்கு போட்டியாக அணுஆயுதங்களைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட வேண்டாம்' இப்படி பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேரிலாந்திலுள்ள அன்னபோலிஸ் என்ற இடத்தில் நடைபெற்ற கடற்படை பயிற்சி மையத்தில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

'அணுஆயுத தயாரிப்பில் பாகிஸ்தான் ஈடுபடக்கூடாது பாகிஸ்தான் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் மீறினால் பொருளாதாரத் தடை விதிக்க நேரிடும்' என்றும் கிளின்ரன் கூறினார்.

இந்தியா நடத்திய அணு வெடிச் சோதனையால் ஆசியப் பிராந்தியத்தின் ஸ்திரத் தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட வேண்டும் என்றும் கிளின்ரன் கேட்டுக் கொண்டார்.

(இ-ரி-10)

# ஜனாதிபதி கிளின்ரனின் சீன விஜயத்துக்கு எதிர்ப்பு

வாஷிங்டன், மே 27

அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் இன்னும் சில வாரங்களில் மேற்கொள்ளவிருக்கும் சீனப் பயணத்தை ரத்துச் செய்யும்படி 150 அமெரிக்க எம். பிக்கள் கோரி உள்ளனர்.

ஏவுகணைத் தொழில் நுட்பத்தை சீனா பாகிஸ்தானுக்கு வழங்கி வருகிறது என்று இவர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

மேலும் சீனா விடயத்தில் அதிபர் கிளின்ரன் தாராளமாக செயற்படுகிறார் என்ற முறைப்பாட்டின் அடிப்படையில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் நான்கு சட்டத்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

★ கிளின்ரன் சீனாவில் சுற்றுப்பயணம் செய்யும்போது விண்வெளி அல்லது ஏவுகணை தொடர்பாக ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளக்கூடாது.

★ வர்த்தக செயற்கை கோள்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது.

★ சீன ஏவுகணை திட்டத்திலோ அல்லது ராக்கெட் ஆராய்ச்சிகளிலோ அமெரிக்க விஞ்ஞானிகள் பங்கேற்கக் கூடாது.

எனினும் கிளின்ரனின் சீனப் பயணத்தில் எந்தமாறுதலும் இல்லை என்று வெள்ளைமாளிகை செய்தித்தொடர்பாளர் மை மெக்குரி தெரிவித்துள்ளார்.

1972 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நிக்ஸன் சீனாவுக்கு விஜயம் செய்து சீன – அமெரிக்க உறவில் புதிய தசாப்தம் ஒன்றை ஆரம்பித்து வைத்தார்.

(இ-ரி-10)

## இந்தியாவை

# அணு ஆயுத நாடாக அங்கீகரிக்க வேண்டும்

## விஞ்ஞானி கோரிக்கை

''இந்தியாவை அணு ஆயுத நாடாக உலக நாடுகள் ஒப்புக்கொள்ள வேண்டும்.''

இப்படி அமெரிக்க அணு சக்தித்துறையில் பணியாற்றியவரும், ஹைட்ரஜன் குண்டைக் கண்டு பிடித்தவருமான எட்வர்ட் டெல்லர் என்ற விஞ்ஞானி தெரிவித்தார்.

அணுகுண்டு சோதனையை இந்தியா நடத்தியதற்காக அதைக் குறை கூறுவது அர்த்தமற்றது. ஏனெனில் உலக சனத்தொகை அடிப்படையில் முன்னணியில் உள்ள நாடுகள் இன்று அணு குண்டுகளை தம்வசம் வைத்துள்ளன.

எனவே இதனை உணர்ந்து அணு ஆயுதம் பரவுவதை தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

பொருளாதாரத் தடை விதித்து அச்சுறுத்துவதனால் இப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாது. நாம் எதை விரும்புகிறோமோ அது நடக்க வேண்டும் என்று நினைப்பதை விடுத்து யதார்த்த நிலையை புரிந்து செயற்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

(இ-10-ரி)

# ராஜீவ் கொலை வழக்கு கைதிகளுக்கு உதவநிதி திரட்டுவதில் தவறு இல்லை

## நெடுமாறன் கூறுகிறார்

சென்னை. மே 27

''ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்காக உச்சநீதி மன்றத்தில் வழக்கு நடத்த நிதி திரட்டுவதில் எந்தத்தவறும் கிடையாது.''

இப்படி 26தமிழர்கள் உயிர் காப்பு வழக்கு நிதிக்குழுத் தலைவர் நெடுமாறன் கூறியுள்ளார்.

வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் வழக்கை உச்ச நீதிமன்றத்தில் நடத்த குழு அமைக்கப்பட்டு நிதி திரட்டப்படுகிறது.

பொதுமக்கள் நிதியை வாரி வழங்குகிறார்கள். இதைக் கண்டு ஆத்திரமடைந்த காங்கிரஸ், த. மா. காவைச் சேர்ந்தவர்கள் கண்டன அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர்.

இந்திய நாட்டுச் சட்டங்களின்படி வழக்குகளை நடத்த நிதிதிரட்டுவது குற்றமல்ல.

மகாத்மா காந்தி கொலை வழக்கில் முதல் குற்றவாளியாக குற்றம் சாட்டப்பட்ட சவர்க்கார், இந்திராகாந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சீக்கியத்தலைவர் சிம்ரஞ்சித் சிங்மான் ஆகியோர் குற்றமற்றவர்கள் என்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

அரசியல் காரணங்களுக்காக வேண்டுமென்றே இவர்கள் இவ் வழக்கில் சேர்க்கப்பட்டதாக சி. பி. ஐ. மீது நீதிமன்றம் குற்றம் சாட்டியது.

அதே போல விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கொச்சைப்படுத்த வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட இந்த பொய் வழக்கை உச்ச நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்று உண்மையை நிலைநாட்ட நாங்கள் முயற்சி செய்கிறோம். இதில் எந்த தவறும் கிடையாது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

# இருபாலையில் மந்தகதியில் வீதி திருத்த வேலைகள்

யாழ்ப்பாணம், மே 27

இருபாலையிலிருந்து நவக்கிரி வரையிலான இராச பாதை வீதித்திருத்த வேலைகள் மந்த கதியில் இடம் பெற்றுவருவதாக கூறப்படுகிறது.

இராசபாதையின் ஒரு பகுதி ஓரளவு திருத்தி அமைக்கப்பட்ட போதும் பாதையின் பலபகுதிகள் தொடர்ந்தும் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.

வீதி திருத்துவதற்கென கல், மண் என்பன மூன்று மாதங்களுக்கு முன்பே பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(இ-7)


ஸ்ரீராம ஜெயம்

**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**

யாழ்ப்பாணம்

**ரெங்கநாதர் கோபுர கட்டுமான வேலைக்கான கூலிக்கு மட்டும் விண்ணப்பம் கோரல்**

தேவஸ்தானத்தில் ஸ்ரீ ரெங்கநாதர் வாயில் கோபுரம் அமைக்க உத்தேசித்திருப்பதால் கோபுர கட்டுமான கலைஞர்களிடமிருந்து கூலிக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எனவே சுயமாகவே விண்ணப்பங்களைத்தயாரித்து கூலித்தொகையைக் குறிப்பிட்டு 02-06-98-க்கு முன் விண்ணப்பத்தை தேவஸ்தானக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

குறிப்பு:- கோபுர அளவீட்டுடன் கூடிய மாதிரி வரைபடம், மேலதிக விவரங்களை தேவஸ்தான வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளவும்,

ரெங்கநாதர் கோபுர திருப்பணிச் சபை

யாழ்ப்பாணம். (சி-3846)


## நிவாரணம்

மே மாதத்திற்குரிய நிவாரணம் 62 ஏ.பி. முத்திரைப் புள்ளிகளுக்குரியது இன்று தொடக்கம் ப.நோ.கூ.சங்க கிளைகள் மூலம் வழங்கப் படவுள்ளது.

வெள்ளை நாட்டு அரிசி, சீனி, மைசூர்ப்பருப்பு, நெஸ்பிறே போன்ற பொருள்கள் விநியோகிக்கப்படும். (இ-5)

# சாவகச்சேரி பொதுநூலகம்

சாவகச்சேரி பொது நூலகத்திலிருந்து கடந்த கால இடம் பெயர்வின் போது 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெறுமதி வாய்ந்த நூல்கள் காணாமல் போய் விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் சிறந்த ஒரு நூலகமாக இயங்கிவந்த இந்த நூலகத்தில் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இருந்தன.

கட்டட வசதிகளற்றநிலையிலும் மீண்டும் சிறப்பாகச் செயற்பட்டு வரும் இந் நூலகத்திற்கு 40 ஆயிரம் ரூபாவுக்கு கடந்த வருடம் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த வருடமும் நூல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இதேவேளை சாவகச்சேரி நகர சபையின் கீழ் இயங்கும் நுணாவில் கிளை நூலகத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந் நூலகம் [illegible] விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (இ-6-5)


34ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 29 01 1946

இறை அடியில் 22 04 1998

திருமதி

**தேவராஜா நாகேஸ்வரி**

அந்தியேட்டி 26 - 05 - 1998

வீட்டுக்கிரியை 27 - 05 - 1998

அன்பின் இலக்கணமாய்
அமைதியின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் மிளிர்ந்து
எங்களை வாழவைத்த தெய்வமே!
எங்கள் குடும்ப விளக்கு அணைந்தாலும்
அதன் ஒளி எங்களிடையே பரவி
எங்களை வழிநடத்தும் என்ற நம்பிக்கையில்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்போமாக.

- குடும்பத்தினர்.

12, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (56318)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடத் திணைக்கள வேலைகள்
# சிமெந்து இல்லாததால் தாமதம்

யாழ்ப்பாணம், மே 27

கொழும்பிலிருந்து சிமெந்து தாமதமாக யாழ்ப்பாணம் வந்து சேர்வதினால் கட்டடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அரச திணைக்களங்களின் கட்டட வேலைகள் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் முடிக்க முடியாமலிருப்பதாக கட்டட திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ். தேவராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

கட்டடத் திணைக்களத்தினால், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக கட்டடங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன, சிமெந்து இல்லாமையினால் இவ் வேலைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலிருக்கின்றோம்.

கடந்த மூன்று மாதங்களாக யாழ்ப்பாணத்திற்கு சிமெந்து அனுப்பி வைக்கப்படவில்லை. தற்போது கப்பலில் எடுத்துவரப்பட்ட சிமெந்தும் இதுவரைக்கும் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்கு வந்து சேரவில்லை.

கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரிக்கு முன்பாக முன்பு இயங்கிய எமது கட்டட திணைக்களம் இடம்பெயர்வின் பின்னர் யாழ்ப்பாணத்தில் தனியார்கட்டடமொன்றில் இயங்கி வருகிறது.

புதிய கட்டடம் ஒன்றை குருநகர் கடற்கரை வீதியில் அமைப்பதற்கு அனுமதி கேட்டு கொழும்பிலுள்ள எமது தலைமைச் செயலகத்துக்கு கடிதம் எழுதியுள்ளேன். புதிய கட்டடத்துக்கு 60 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எமது திணைக்களத்தைப் பொறுத்த வரையிலும் ஊழியர் பற்றாக்குறையிருக்கிறது. இது தொடர்பாகவும் தலைமைச் செயலகத்துக்கு அறிவித்துள்ளேன்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-5)

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அபிவிருத்தி வேலைகளுக்கு ரூ. 40 லட்சம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மே 27

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அத்திவாரம் போடப்பட்ட நிலையில் உள்ள இரு மாடிக் கட்டடங்களைக் கொண்ட வகுப்பறைத் தொகுதியை திருத்தியமைப்பதற்கு மாகாணக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு 40 லட்சம் ரூபாவைப் பெற்றுத் தருவதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

கல்லூரியின் அதிபர் தலைமையிலான குழு ஒன்று அண்மையில் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து பாடசாலை அபிவிருத்தி தொடர்பாகவும், கல்லூரியின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் காரணிகள் தொடர்பாகவும் எடுத்து விளக்கிய போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

சேதமடைந்த நிலையில் உள்ள தற்காலிக கொட்டகைகள் திருத்தப்பட வேண்டும் எனவும்—

குழாய் நீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறும்—

பாண்ட் மற்றும் இசைக் வாத்தியக் கருவிகள் போன்றவற்றை பெற்றுத் தருமாறும்—

கணனி வசதிகளையும், நூலகத்துக்குத் தேவையான நூல்களைப் பெற்றுத் தருமாறும்—

இடிந்த நிலையில் உள்ள கட்டடங்களின் இடிபாடுகளை அகற்றித் தருமாறும்—அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தற்காலிக கொட்டகைகளைப் புதுப்பிக்க 4 இலட்சம் ரூபாவையும், இசைக் கருவிகள், கணனிகள் போன்றவற்றைப் பெற்றுத் தருவது உட்பட அவர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதாக டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

நூல் நிலையத்துக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களைப் பெற்றுத் தருவதாகவும், இடிபாடுகளை புல்டோசர் மூலமாக அகற்றித் தருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

இச் சந்திப்பில் அதிபர், ஆசிரியர்கள், மாணவப் பிரதி நிதிகள் ஈ.பி.டி.பி. சார்பில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் நிஷாந்தன், கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் ரவி, வலி. கிழக்கு பிரதேசசபைத் தலைவர் வசந்தன், அந்தரங்க செயலாளர் பிரதாப் ஆகியோர் கலந்து கொண்டனர். [இ-9]

# வடக்கு - கிழக்கு பகுதி பதிவாளர்களுக்கு பாராட்டு

கொழும்பு பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் பதிவாளர்களுக்கு புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் இலங்கையின் அனைத்துப் பகுதி மாவட்டப் பதிவாளர்கள் கலந்து கொண்டனர். இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு மேலதிக செயலாளர் கே. பி. ஆர், குணதிலகா உரையாற்றும் போதே குறிப்பிடப்பட்ட பதிவாளர்களின் சேவைகளுக்கு புகழாரம் சூட்டினார்,

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள பதிவாளர் அலுவலகங்களில் ஊழல்கள், லஞ்சம்வாங்குதல்கள் போன்றவை தொடர்பாக எமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு— கிழக்கு பதிவாளர்கள் பற்றி எவ்விதமான முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. யுத்த சூழ்நிலையிலும் அவர்கள் சிறப்பாக பணியாற்றினார்கள் என்று அங்கு அவர்கள்மேலும் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக மாவட்ட பதிவாளர் ந.சதாசிவஐயரும், வடமராட்சி மேலதிக மாவட்ட பதிவாளர் பொ. ஈஸ்வரதாசனும் கலந்து சொண்டனர். [இ-6-5[

# பிறப்பு, இறப்பு பதிவு கணனி மயப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், மே 27

விவாகம், பிறப்பு, இறப்பு பதிவு செய்யப்படுவது கணனி மயப்படுத்தப்படவிருக்கிறது.

அண்மையில் கொழும்பில் நடந்த மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்கான கருத்தரங்கில் மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

விவாகம், பிறப்பு, இறப்புப்பதிவுகளை மேற்கொள்ளவும் —

அவற்றின் பிரதிச் சான்றிதழ்களை பொதுமக்கள் சுலபமாகப்பெறவும் — வசதியளிக்கும் வகையில் இந்தப் பதிவுகளை கணனிமயப்படுத்த பதிவாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளாரென இக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

பதிவுகள் தொடர்பான மாதாந்த அறிக்கைகள், இணைப்பிரதிகள் ஆகியவற்றை யாழ். மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் குறிப்பிட்ட காலங்களில் கொழும்புக்கு அனுப்பி வைப்பதாகவும் —

நாடெங்கிலும் உள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு இது முன்மாதிரியாக உள்ளது என்றும்- இக் கருத்தரங்கில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# இரவு நேர இலவச வகுப்பு

யாழ்ப்பாணம் மே 27

திருநெலவேலி பாற்பண்ணை வீதியிலுள்ள காந்திஜி சனசமூக நிலையத்தில் பாடசாலை மாணவர்களுக்கான இரவுநேர இலவச வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

மாலை 6 மணிமுதல் இரவு 8-30 மணி வரை இடம் பெறும் இவ்வகுப்பில் பெருந் எண்ணிக்கையான மாணவர்கள் பங்கு பற்றி வருகின்றனர். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீமதி தாட்சாயினி சிவானந்த சர்மா
(ஆசிரியை)

அவர்களின் மறைவினால் துயருறும் அவரின் கணவர், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பரிபாலன சபையினர்
பலானை கண்ணகை அம்மன் கோயில்
ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோயில்
கோப்பாய் வடக்கு.

(56311)



## இம் மாதத்திற்கான

மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களும், மாதாந்தப் புலமைப் பரிசில் வினாத்தாள்களும் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

BOND யாழ். நகர்.

(56266)



## பதவி வெற்றிடங்கள்

காலத்தின் மாற்றத்துக்கேற்ப நாமும் பல மாறுதல்களைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆம்

அதிகரித்துவரும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்புகளில் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கும் தேவை ஏற்பட்டுள்ளதால் புதிய ஆசிரியர்களை நியமிக்கின்றோம்.

**ஆண்டு 5 – 11 வரை**
**அனைத்து பாடங்களிலும்**

கற்பித்தல் அனுபவம், போதிய கல்வித் தகைமைகள் ஆகியவற்றுக்கான சான்றிதழ்களுடன்

**30 - 05 - 98 காலை 9-00 மணிமுதல்**
**12 மணிவரை நேரில் வரவும்.**

அலுவலக, லிகிதர் பதவிக்கான வெற்றிடமும் அன்று நிரப்பப்படும்.

A/L வரை கற்ற நிறுவன பழைய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

The Express Institute
IRUPALAI KOPAY
—அதிபர்

(56310)



யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு 1995 | 96

பின்வரும் பீடங்களைச் சேர்ந்த (1996/97 பிரிவு தவிர்ந்த) சகல மாணவர்களுக்குமான மகாபொல கொடுப்பனவுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான கால அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

கலைப்பீடம்
விஞ்ஞானபீடம்
மருத்துவபீடம்
விவசாயபீடம்
சித்தமருத்துவப் பிரிவு

- பதிவாளர்

(இ-3844)



## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



வையகம்
24
07
1919

வானகம்
17
04
1998

## அமரர் முத்து இரத்தினம்

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (27 – 05 – 1998) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபீண்டீகரணக் கிரியைகளிலும் இதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவால் துன்புறும்!
சகோதரி, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்.
உறவினர்கள்.

''இரத்தினமஹால்'',
பிரதான வீதி,
சங்கானை.

(56313)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சி

யாழ்ப்பாணம், மே 27

நெடுந்தீவு பஸ் சேவையை படகு சேவையுடன் தொடர்புபடுத்தி இப்பகுதி மக்களின் போக்குவரத்தை சீர் செய்யுமாறு நெடுந்தீவு உதவி அரச அதிபர் வடபிராந்திய போக்குவரத்துச் சபையைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நெடுந்தீவிலிருந்து புறப்பட்டு காலை 10 மணிக்கு குறிகாட்டுவானை வந்தடையும் பயணிகளது பிரயாண வசதி கருதி இதுவரை காலமும் படகுச் சேவையுடன் தொடர்புபடுத்தி சேவைக்கு விடப்பட்டிருந்த பஸ் கடந்த சில நாள்களாக படகு குறிகாட்டுவானை வந்தடைய முன்னரே யாழ். நகருக்கு புறப்பட்டு விடுகிறது.

நெடுந்தீவிலிருந்து காலை 7.00 மணிக்கு தமது பயணத்தை ஆரம்பித்து 10.30 மணிக்கு குறிகாட்டுவானை வந்தடையும் மக்கள் யாழ். நகருக்கான தமது பயணத்தைத் தொடர குடிதண்ணீர் உணவு மற்றும் கழிப்பிட வசதிகளற்ற குறிகாட்டுவான் துறையில் மேலும் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் வரை தாமதித்து குறிகாட்டுவானிலிருந்து யாழ். நகர் செல்லும் இரண்டாவது பஸ்ஸுக்காக காத்து நிற்க வேண்டியுள்ளது.

வழமையான பஸ் சேவையைப் பெறமுடியாத காரணத்தினால் பொதுமக்கள், நோயாளர்கள், கர்ப்பிணிப் பெண்கள், நீண்டதூரம் செல்ல வேண்டியவர்கள், கைக்குழந்தைகளுடன் பயணம் செய்பவர்கள் மிகவும் கஷ்டமடைகிறார்கள்.

இந்த பஸ் சேவையில் நேரமாற்றம் காரணமாக மக்கள் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர். நெடுந்தீவு மக்களின் பிரயாண வசதியையும் படகுச் சேவையுடன் தொடர்புடைய பஸ் சேவையின் அவசியத்தையும் கருத்திற்கொண்டு மேற்படி சேவையை நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-6-5)

## ஈழத்து சிதம்பரத்தில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 27

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் ஸ்ரீசௌந்தராம்பிகா சமேத ஸ்ரீசுந்தரேஸ்வர சுவாமி ஆலய நூதன இராஜகோபுர அஷ்டபந்தன சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகின்றன. நவாலியூர் பிரதிஷ்டா சிரோன்மணி சாமி. விஸ்வநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கிரியைகளை நடத்துவார்.

(ஐ-7)

## கப்பலில் பொருள்கள் அனுப்பி வைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 27

பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'ஹண்டி' கப்பலிலும் — காங்கேசன்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'லங்கா முடித' கப்பலிலும் — பொருள்கள் இறக்கி முடித்த பின்னர் விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொழும்புக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

பொருள் அனுப்ப விரும்புபவர்கள் யாழ். செயலகத்தில் பதிவுசெய்து, பின்னர் சிவில்நிர்வாக அலுவலகத்தில் அனுமதி பெற்றுப் பொருள்களை அனுப்பலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

வெங்காயம், வாழைப்பழம், மரக்கறி வகைகள் உட்பட பழுதடையக் கூடிய உற்பத்திப் பொருள்கள் கப்பல் கட்டணமின்றியும், புகையிலை உட்பட ஏனைய உற்பத்திப் பொருள்கள் அரைக் கட்டணத்துடனும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-5-3)

## 'சார்க்' மாநாட்டை கொழும்பில் நடத்துவது குறித்து முடிவில்லை

கொழும்பு, மே 27

'சார்க்' மாநாட்டைதிட்டமிட்டபடி ஜூலை மாதம் கொழும்பில் நடத்துவது குறித்து தெளிவான முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படாத போதிலும் இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் அம் மாநாட்டில் கலந்து கொள்வார் என தற்போது கொழும்பில் தங்கியுள்ள இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திருமதி சுஸ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தியா அண்மையில் நடத்திய அணுகுண்டுப் பரிசோதனைகளால் பிரதமர் வாஜ்பாய்க்கு கொலைப்பயமுறுத்தல் இருப்பதாகவும் அவரை இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என்றும் சுஸ்மா சுவராஜ் கூறியதாக இலங்கை வானொலி தெரிவித்தது. (ஐ-7)

## வாதரவத்தை கொலை: சிப்பாய்க்குப் பிணை

புத்தூர் வாதரவத்தையில் இரு இளைஞர்களைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 13 ஆவது சந்தேக நபரான விதானகே கம்கானம்கேசுகத் (வயது 23) என்ற இராணுவ சிப்பாய் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை 5 ஆயிரம் ரூபா பிணையில் நீதிவான் விடுவித்தார்.

கடந்த தவணையின் போது இக் கொலைகளின் சந்தேக நபர்களான 13 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேற்குறிப்பிட்ட 13ஆவது சந்தேகநபர் சுகயீனம் காரணமாக நீதிமன்றுக்குச் சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கின் அடுத்த விசாரணை ஜூன் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ-5)

## புலி உறுப்பினர் மரணம்

வவுனியா, மே 27

கடந்த ஞாயிறன்று மாதங்குளம் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையில் ஏற்பட்ட மோதலில் எழில்மதி அல்லது எழிலரசி (செல்லத்துரை கௌரி-நெடுங்கேணி) என்ற விடுதலைப் புலிஉறுப்பினர் உயிரிழந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஐ-9)

## கிணற்றில் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம் மே 27

கிணற்றில் தண்ணீர் அள்ளியபோது தவறிவிழுந்த ஒருவர் உயிரிழந்தார்.

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஞானமூர்த்தி பாலேஸ்வரி (வயது 45) என்பவரே மரணமானவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-15-139)

## போக்குவரத்துசபை ஊழியர் சம்பள உயர்வு இன்னும் முழுமையாக இல்லை

யாழ்ப்பாணம், மே 27

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு அரசு அறிவித்த சம்பள உயர்வில் 60 சதவீதம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு கூறப்படுகிறது.

அரசாங்கம் அறிவித்த சம்பள உயர்வில் 40 சதவீத சம்பள உயர்வு 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டது.

98 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மீதியான 60 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை அந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த போக்குவரத்துச் சபைத் தலைவர் இந்த சம்பள உயர்வை வழங்க இணக்கம் தெரிவித்தாராயினும் இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## சிங்களத்தில் வழக்குகள் தாக்கல்; யாழ். நீதிமன்றங்களில் குழப்பம்!

யாழ்ப்பாணம், மே 27

யாழ்- மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் பொலிஸார் சிங்களத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்வதால் வழக்காளிகளும், எதிராளிகளும் வழக்குகளை விளங்கிக் கொள்ள முடியாது சிரமப்படுகின்றனர்.

குறிப்பாக எதிராளிகள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பற்றி அறிய முடியாது தடுமாற்றம் அடைந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம், காங்கேசன்துறை, இளவாலை, சங்கானை, சாவகச்சேரி, பளை, கொடிகாமம், நெல்லியடி, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் தற்போது பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இப்பொலிஸ் நிலையங்களிலிருந்து மல்லாகம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை போன்ற இடங்களிலுள்ள நீதிமன்றங்களில் தினமும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

இவர்களால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் அனைத்தும் சிங்களத்தில் இருப்பதால் எதிராளிகள், வழக்காளிகள் மட்டுமல்ல நீதிவான்கள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களும் பெரும் சிரமமடைகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவைகள் முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது,

(ஐ-5)


உ

## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் வெகுதானிய வருஷம் வைகாசி மாதம் 13ஆம் நாள் (27-05-1998) புதன்கிழமை காலை 7-14 மணி முதல் 9-15 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்

**பத்மநாத சர்மாவிற்கு**

அருள்மிகு அராலி அகாயக்குளம் விநாயகர் திருவருளை முன்னிட்டு

யக்ஞோபவீத தாரண பிரம்மோபதேசம் செய்ய

பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சோ. ராமநாதசர்மா
நாகேஸ்வரி தம்பதிகள்
நல்லூர்.

தங்கள் நல்வரவை நாடும்:
திருமதி நா. தியாகராஜக் குருக்கள்
குடும்பம்
அராலி தெற்கு, மாதாங்கோயிலடி,
[illegible]

(56203)


## மொனராகலையில் கடத்தப்பட்ட விவசாயிகள் நால்வர் சடலமாக மீட்பு

மொனராகல மாவட்டத்தில் இனந்தெரியாத நபர்களால்கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த விவசாயிகள் நால்வர் நேற்றுமுன்தினம் கப்பம்கம வீதியோரத்தில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

கடந்த வாரம் 24 விவசாயிகளைக் கடத்திய இனந்தெரியாத நபர்கள் அவர்களில் 20 பேரை விடுதலை செய்தனர். நால்வரை மட்டும் தடுத்து வைத்திருந்தனர்.

அவர்களை விடுவிப்பதாயின் தமக்கு ஒரு தொகைப் பணம் வழங்கப்படவேண்டும் என்றும் அந்த நபர்கள் கோரியிருந்தனர்.

இது குறித்து படையினருக்கு எவராவது தகவல் கொடுத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள நால்வரும் கொல்லப்படுவர் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் நேற்றுக் காலை அந்த நான்கு விவசாயிகளின் சடலங்களும் மீட்கப்பட்டன.

தங்கள் தோட்டத்தில் பூசினிக்காய் பறிக்கச்சென்ற சமயம் இந்த விவசாயிகள் கடத்தப்பட்டனர்.

இவர்களை விடுதலைப் புலிகளே கடத்திச் சென்று அடித்துக் கொன்றுள்ளதாக மொனராகலைப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (ஐ-9-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

09-05-98 அன்று தாவடி ரெலிபோன் கடையில் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[55419]

### திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணை சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு; சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி (கன்னாதிட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.

(56181)

### ஆங்கிலம் விசேடமாக

O/L இல் Credit, Distinction பெறுபேறடையவும். G.A Q. Spoken English உட்பட ஆண்டு 9, 10 கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில்மேற்குவீதி, திருநெல்வேலி.

(56170)

### திருமண சேவை

எங்களிடம் 60ஆம் ஆண்டு ஆயிலிய நட்சத்திரமுடைய செவ்வாய்க் குற்றமற்ற ஆசிரியருக்கு மணப்பெண் தேவை. கத்தோலிக்க வேதத்தில் தொழில்நுட்பவியலாளராக கடமைபுரியும் 67 ஆம் ஆண்டு மணமகனுக்கு மணப்பெண் தேவை. குறிப்பு, புகைப்படத்துடன்தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமணசேவை, இல. 178, நாவலர்றோட், யாழ்ப்பாணம்.

[56306[


## மண்வெட்டி விநியோகம்

யாழ்ப்பாணம், மே 27

உலக உணவு விவசாய நிறுவனத்தின் நிதி உதவியுடன் வேலணை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள 150 விவசாயிகளுக்கு இன்று செவ்வாய்க்கிழமையும்— ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள 200 விவசாயிகளுக்கு எதிர்வரும் முதலாம் திகதியும் — வேலணை விவசாய போதனாசிரியர் அலுவலகத்தில் வைத்து மண்வெட்டிகள் வழங்கப்படும் என விவசாயப் போதனாசிரியர் அறிவித்துள்ளார்.

(ஐ-9)

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 — 04 — 1938 | 27 — 05 — 1987 |

அமரர்

**அருளம்பலம் முத்துராஜா**

(முன்னாள் உபதபால் அதிபர், தொண்டமானாறு)

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன – உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமாப்பா; தேறுதல் சொல்ல யாரிருந்தென்ன உங்கள் திருமுகம் பார்ப்பது போலாகுமா? பதினொரு ஆண்டென்ன எத்தனை ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்,

மனைவியும், பிள்ளைகளும்,

கெருடாவில், தொண்டமானாறு. (56267)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02 — 03 — 1934 | 27 — 04 — 1998 |

திருமதி

**பத்மாவதி நாகலிங்கம்**

அகல விரித்த நல்ல அன்னைச் சிறகினுள்ளே
தவழும் குழந்தை ஆறைத் தினமும் வளர்த்த தாயே!
புகழும் உலகம் உம்மைப் பூவென்று எண்ணியதோ
பொழுதின் மடியில் நீரும் வாடியே வீழ்ந்தீரம்மா!


முப்பத்தொரு நாட் கடந்தால் ஆறிடுமோ எம் இதயம். ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

உங்களின் நீங்காத நினைவில் வாழும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பழமுதிர்சோலை,
மூளாய், (56275)

## நீங்காத நினைவலைகள்





அமரர்

**கந்தப்பு ஸ்ரீபன் தேவராசா** (தேவா)

மலர்வு 22 — 08 — 1946
உதிர்வு 27 — 05 — 1984

அமரர்

**கந்தப்பு ஸ்ரீபன் ஞானராசா** (ஞானி)

மலர்வு 09 — 08 — 1955
உதிர்வு 29 — 05 — 1982

என் இரு கண்ணின் விழிகளே! உங்களை மோட்சகரையில் சந்திப்பேன் என்ற விசுவாசத்துடன் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

உங்கள் அம்மா

ஸ்ரேசன் லேன்,
சாவகச்சேரி. [56160]

## மீண்டும் மூன்று நாள் செயன்முறைப் பயிற்சி

MAKEUP & HAIR STYLE

மே 29 ஆம், 30 ஆம், 31 ஆம் திகதிகளில்
காலை 9 மணிமுதல்
சான்றிதழுடன் கூடிய பயிற்சி.

**தூரிகை நுண்கலை வளாகம்**
சட்டநாதர்வீதி, நல்லூர்.

[56223]

## நன்றிகள்

1973 — 1998

நடைபெற்ற எமது வெள்ளிவிழா சிறப்புற அமைய

ஆக்கமும், ஊக்கமும் நல்கிய
அன்பு நெஞ்சங்கள் அனைத்துக்கும்,

விழாவை ஒழுங்கமைத்து சிறப்பித்த நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும்
விழாவில் கலந்து சிறப்பித்த பல்லாயிரக் கணக்கான அன்பு உள்ளங்கள் அனைத்துக்கும்

எமது மனமார்ந்த நன்றிகள்.

– வெள்ளிவிழாக் குழுவினர்

[56309[

## கண்ணீர் அஞ்சலி

எமது லயன்ஸ் கழக அங்கத்தவர்
Dr. பேரானந்தம்
அவர்களின் மகள்

திருமதி


**பானு கந்தவனச்செல்வன்**

அவர்கள் மரணமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

லயன்ஸ் கழகம்
கொக்குவில்.

(56305)

## ஓராண்டு நிறைவு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் திருவடியில் |
|---|---|
| 20 — 09 — 1926 | 06 — 06 — 1997 |

**அமரர் தம்பையா சிவசுப்பிரமணியம்**

நாளும் தவறாது நல்லைக்குமரன் தாள் போற்றி
நல்லையம் பதியில் நல் வாழ் வமைத்து
தேரடியான் துணையென்று தேங்காயுடைத்து
கண் கண்ட தெய்வமாய் – தூய துணைவனாய்
தங்கச் செல்வங்களின் அன்புத் தந்தையாய்
உற்றார் உறவினர் உறு துணையாய்
நண்பர், அன்பர் நாடினோர் பண்பாளனாய்
அன்பு பண்பு பாசத்தின் உறைவிடமாய்,
இலக்கணமாய்
வாழ்ந்த அன்புத் தெய்வமே!

உங்கள் அன்பு முகம் எமை விட்டு என்றுமே நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டி நிற்கும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரர், சகோதரர், சகோதரி,
மைத்துனர், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்.

15, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். (56272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மீண்டும் முருங்கையில்

ஆட்சி, நிர்வாக மாற்றங்கள் — எமது சமூகக் கட்டமைப்பிலும் தலைகீழான நிலையைத்தோற்றுவிக்கும் அவலமான கட்டத்துக்கு இன்று வந்திருக்கின்றன.

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் எமது சமூகம் கட்டிக்காத்து வந்த சமூகப் பண்பாடுகள், விழுமியங்கள் போன்றவை, அவற்றைக் கட்டிக் காத்து வந்த வேலிகள் தகர்ந்து போக, நாலாபுறமும் சிதறிப் போயின; விளைவாக சமூகச் சீரழிவுகள் உட்புகுந்துபேயாட்டம்போடும் அவல நிலை வடிவெடுத்திருக்கின்றது.

மினிசினிமா, நீலப்படம், கொலை, கொள்ளை, கசிப்பு, விபசாரம், கீழ்த்தரமான பழக்கவழக்கங்கள் திடீரென பேரெழுச்சியுடன் பரவத்தொடங்கியிருப்பதால் மனம் நொந்து போயிருக்கின்றனர் சமூகப் பொறுப்பாளர்கள். அவர்களுக்கு பேரிடியாக வந்து வீழ்ந்திருக்கின்ற மற்றொரு அதிர்ச்சிதான் மதத்தின் பெயரால் நடக்கும் 'பலியிடுதல்' என்ற அநாகரிக செயற்பாடு.

மதக் குழுமங்களின் மரபுகள், வழக்காறுகள் போன்றவை மதிக்கப்பட வேண்டும்; பேணப்பட வேண்டும் — என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் மதத்தின் பெயரால் குரூரமான — கொடூரமான —அநாகரிகமான — காட்டுமிராண்டித்தனமான — செயல்களைப் புரிவது — அதுவும் பெரிய திருவிழாவாக — பொது நிகழ்வாக—அதைச் செயற்படுத்துவது ஏற்றுக் கொள்ளவோ நியாயப்படுத்தவோ முடியாததாகும்.

'அன்பே சிவம்' என்பவர்கள் சைவ சமயத்தவர்கள். தம்மை ஒறுத்துப் பிறரை —பிற உயிர்களைப் — பேணும் தவம் இயற்றி அதன் மூலம்இறைவனைக் கண்டவர்கள் இந்து சமயிகள். 'கொல்லாமை' என்ற சீரிய — உயர்ந்த — பண்பிலே பரிணமித்ததுதான் வைதீக வணக்க முறை.

இந்து சமயத்தின் எந்த ஆதீனமும், மத பீடங்களும், ஆத்மீக வழிகாட்டிகளும், சமய அமைப்புகளும் பலியிடுதலை ஏற்கவோ, ஆதரிக்கவோ இல்லை என்பதும் நோக்கற்பாலது.

சில அடிப்படை வாதக் கோட்பாடுகளைக் காரணம் காட்டிக் கொண்டு, 'பலியிடுதல்'போன்ற அநாகரிக பழக்க வழக்கங்களைத் தொடர்வதற்கும் அதன் மூலம் தங்கள் குரூரமன நிறைவை எட்டுவதற்கும், பலியிடுதலின் பேரில் இறைச்சி வியாபாரம் செய்து பணம் சம்பாதிப்பதற்கும் சிலரால் எடுக்கப்படும் முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

மதத்தின்பெயரால் நடக்கும் இந்த 'மதம்' பிடித்த செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்து, சைவ அமைப்புக்கள், நிறுவனங்கள்பொங்கி எழவேண்டும்.

புலிகள் இந்தப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் காலம் வரை பலியிடும் எண்ணத்தையே பலியிட்டிருந்தவர்கள், இன்று நிலைமை மாறியதும் மீண்டும் 'முருங்கை மரத்தில் ஏறுவது' அனுமதிக்கத் தக்கதல்ல.

# வலி.வடக்கு பாடசாலைகள் மீண்டும் வழமைக்குத் திரும்புவது எப்போது?

வலி. வடக்குப் பகுதியில் 45 பாடசாலைகள் 1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னர் இயங்கிவந்தன.

ஆனால் தற்போது 31 பாடசாலைகள் மட்டுமே அங்கு இயங்கி வருகின்றன.

1990 ஆம் ஆண்டில் இப்பகுதியில் சுமார் 21 ஆயிரம் குடும்பங்கள் வரை வசித்து வந்தன.

ஆனால் இதுவரை வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பதினைந்து கிராம அலுவலர் பிரிவுகளில் மட்டுமே மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதிலும் 3 ஆயிரத்து 747 குடும்பங்களே மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இந் நிலைமையில் குறிப்பாக 12 பாடசாலைகள் மட்டுமே தமது சொந்த இடத்தில் இயங்குகின்றன.

ஏனைய 19 பாடசாலைகள் தமது சொந்த இடங்களில் இயங்காது தற்காலிக கொட்டில்களிலும், மற்றும் பாடசாலைகள் சிலவற்றுடன் இணைந்தும் இயங்கி வருகின்றன.

இப்பகுதியில் முதலாந்தர ஏ.பி பாடசாலைகள் நான்கு உள்ளன.

நடேஸ்வராக் கல்லூரி, வசாவிளான் மகாவித்தியாலயம், மகாஜனாக்கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவைகளே அவை ஆகும்.

இப்பாடசாலைகள் ஒரு காலத்தில் கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் முக்கிய இடத்தைப் பெற்று வந்தன.

## மீளக்குடியமர்வின் பின்பும் சீராகாத நிலைமை

இப்பாடசாலைகளில் சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கல்வி பயின்றனர்,

ஆனால் தற்போது சுமார் 2 ஆயிரத்து 800 மாணவ மாணவிகள் மட்டுமே கல்வி கற்று வருகின்றனர்.

இப்பாடசாலைகள் உதைபந்தாட்டத்தில் தனக்கொரு இடத்தைக் கொண்டிருந்ததுடன் ஏனைய துறைகளிலும் தமக்கென இடங்களையும் பெற்றிருந்தன.

### கொட்டில்களில்

ஆனால் இப்பாடசாலைகள் இன்று தற்காலிக கொட்டில்களில் இயங்குகின்ற அவலநிலை காணப்படுகின்றது.

போதிய தளபாட வசதிகள் விளையாட்டு மைதான வசதிகள் கிடையாது.

ஆயிரத்து 300—க்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுடன் இயங்கி வந்த நடேஸ்வராக்கல்லூரி தற்போது நூறுக்கும் குறைவான மாணவர்களுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

முதலாந்தர ஏ.பி பாடசாலையாக இருந்த போதிலும் இப்பாடசாலை தனது சகல தொழிற்பாடுகளையும் இழந்து எந்த வகையான பாடசாலை மாணவர்களின் புறநடவடிக்கைகளிலும் ஈடுபடாது இயங்கி வருகிறது.

மகாஜனக்கல்லூரி தற்காலிகமாக மருதனார் மடத்தில் கொட்டிலிலும், வசாவிளான் மகாவித்தியாலயம் உரும்பிராயில் தற்காலிக கொட்டிலிலும், யூனியன்கல்லூரி இராமநாதன் மகளிர் கல்லூரியின் ஒரு பகுதியிலும் போதிய தளபாட வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றன.

இப்பாடசாலைகளின் அதிபர். ஆசிரியர்களின் முயற்சியினாலும், மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவ மாணவிகள் காட்டும் ஆர்வத்தினாலும், உதைபந்தாட்டம் மற்றும் விளையாட்டுப்போட்டிகள் ஆகியவற்றிலும்—

ஏனைய நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி தமது பெயரை தக்கவைக்கக் கூடிய நிலையில் இன்றும் இயங்கி வருகின்றன.

1 சீ பாடசாலைகள் நான்கு வலி. வடக்கில் உள்ளன.

இதில் மல்லாகம் மகாவித்தியாலயம் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரிஆகியன தமது சொந்த இடங்களில் இயங்குகின்றன.

இதேவேளை 1 சீ பாடசாலையானவீமன் காமம் மகாவித்தியாலயம் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் 76 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

### மாணவர் வரவு வீழ்ச்சி

இப்பாடசாலைகள் தமது சொந்த இடத்தில் இயங்குகின்ற போதிலும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் இந் நான்கு பாடசாலைகளிலும் 3 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தனர்.

தற்போது ஆயிரத்து 500 மாணவர்கள் வரையே கல்வி கற்கின்றனர்.

இப்பாடசாலைகள் தளபாட வசதிகள் இன்றிக் காணப்படுவதுடன் இவற்றின் கட்டடங்களும் சேதமுற்ற நிலையில் காணப்படுகின்றன.

இப்பாடசாலைகளில் மாணவர்களுக்கான கதிரை, மேசைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

தரம் II பாடசாலைகளாக தற்போது பத்துப் பாடசாலைகள் இயங்கி வரு வருகின்றன.

இப்பாடசாலைகளிலும் இடம்பெயர்வுக்கு முன் ஆயிரத்து 500 மாணவ மாணவியர்களுக்குமேல் கல்வி கற்றனர். தற்போது ஆயிரத்துக்கு உட்பட்ட மாணவர்களே கல்வி கற்கின்றனர்.

இப்பாடசாலைகளில் நான்கு பாடசாலைகள் சொந்த இடங்களிலும் ஏனைய இரண்டு பாடசாலைகள் இராமநாதன் கல்லூரியிலும் ஏனைய பாடசாலைகள் தனியார் வீடுகளிலும் இயங்கி வருகின்றன.

குறிப்பாக மேற் கூறப்பட்ட 18 பாடசாலைகளும் ஆண்டு 6 முதல் ஜி. சீ. ஈ உயர்தரம் வரையான வகுப்புகளைக் கொண்டுள்ளன.

இப்பாடசாலை மாணவர் தமது விஞ்ஞான பாடத்திற்கான ஆய்வு கூடவசதிகள் இன்றியே தமது கல்வியைப் பெறுகின்றனர்.

### ஆய்வுகூட வசதி இல்லை

ஆய்வு கூடம் உள்ள பாடசாலைகளிலும் கூடஆய்வு கூடத்திற்கு வேண்டிய உபகரண,வசதிகள் இல்லை.

அதேவேளை இரசாயனப் பொருள்களும் இல்லை.

சில பாடசாலைகள் பரிசோதனைகளுக்கு வேண்டிய உபகரணங்கள் இரசாயனப் பொருள்களை பெற்றோர்கள் பழைய மாணவர்களின் உதவியுடன் பெற்றுள்ளன.

தரம் iii பாடசாலைகள் 13 இயங்குகின்றன.

இப்பாடசாலைகள் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 5வரை வகுப்புக்களாகக் கொண்டுள்ளன.

இப்பாடசாலை இடம் பெயர்வுக்கு முன் 3 ஆயிரத்

**செய்தி மடல்**

துக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளைக் கொண்டிருந்தன.

ஆனால் தற்போது 800 மாணவ மாணவிகளே கல்வி கற்று வருகின்றார்கள்.

இதிலும் ஆறு பாடசாலைகள் மட்டுமே சொந்த இடங்களிலும் ஏனைய பாடசாலைகள்தற்காலிக கொட்டில்களிலும் தனியார் வீடுகளிலும் இயங்கி வருகின்றன;

வலி. வடக்கில் ஆரம்ப கால கட்டத்தில் இயங்கிய15 பாடசாலைகளுக்குஇராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மூடு விழாநடத்தப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைகளை மீள ஆரம்பிக்கவேண்டுமானால் மீண்டும் கல்வி அமைச்சின் அனுமதி பெற்றே இப் பாடசாலைகளைஆரம்பிக்க முடியும்.

### ஆசிரியர் பற்றாக்குறை

இப் பகுதியில் இயங்கும் பாடசாலைகள் அனைத்திலும் ஆசிரியபற்றாக்குறை காணப்படுகின்றது.

பெரிதும்ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையும் ஆரம்ப ஆசிரியர்கள், மற்றும் உயர்தர வகுப்புக்களுக்கான ஆசிரியர்களுக்குமே பற்றாக்குறை நிலவுகிறது.

கடந்த இரண்டு வருட காலத்தில் இரண்டு தடவைகள் புதிய ஆசிரியர்கள் நியமனம் பெற்று 500 பேருக்கு மேல் ஆசிரிய முன் பயிற்சியும் வழங்கப்பட்ட போதிலும் தெல்லிப்பழை கல்விக் கோட்டத்திற்கு 17ஆசிரியர்கள் மட்டுமே நியமனம் பெற்றுள்ளனர்.

1995 ஆம் ஆண்டில், இடம் பெயர்வுகுகு முன்பு தெல்லிப் பழைக்கோட்டத்தில் 519 ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள்.

ஆனால் தற்போது 282 ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து 88 ஆசிரியர்கள் வன்னி மாவட்டத்தில் கடமையாற்றுகின்றார்கள். இத்துடன் ஓய்வூதியம் பெற்று 50-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் சென்று விட்டார்கள். இவ்வாசிரியர்களின்இடத்துக்கு வேறு ஆசிரிய நியமனங்கள் இன்று வரையும் கல்வித்திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படவில்லை.

### தொண்டர் ஆசிரியர்

பல பாடசாலைகளிலும் தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

இவர்கள் பல ஆண்டுகளாக தமக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கப்படுமென கோரி வருகின்றனர். 300 முதல் 500 ரூபா வரையான உதவுத் தொகையுடன் கடமையாற்றி வருகின்றனர்.

சில பாடசாலைகளில் இக் கொடுப்பனவுகள் கூட வழங்கப்படுவதில்லை.

தம்மை நிரந்தரமாக்குவதாக அரசியல் வாதிகள் கூறுவதைக் கேட்டு தொண்டர் ஆசிரியர்கள் இன்று இல்லாவிட்டாலும் நாளை கிடைக்கும், எமது உழைப்புக்கு பயன்கிட்டுமென்ற நம்பிக்கையுடன் கடமையாற்றுகின்றனர். பத்து வருடங்களாகக் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களும் இவர்களில் அடங்குகின்றனர்.

ஆனால் இன்றைய நிலையில் மாணவர்கள் பெற்றோர்களின் எண்ணம், சிந்தனை முழுவதும் மாணவர்களின் கல்விக்கு வேண்டிய ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கையெடுக்கவேண்டுமென்பதே.

மாணவர்கள் நிலத்திலிருந்து கல்வி கற்றாலும் கூட

**வலி. வடக்கு செய்தியாளர்**

ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துவிடக் கூடாது என்பதே முக்கியமான எதிர்பார்ப்பாகும்.

இன்று பாடசாலைகள் இடம் பெயர்ந்து வேறுஇடங்களில் தற்காலிக கொட்டில்களிலோ, தனியார் வீடுகளிலோ மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்ட அதிபர் ஆசிரியர்களினால் நடத்தப்படுவது பாராட்டுக்கு உரியதாகும்.

இதே நேரம் சொந்த இடத்தில் இயங்கும் சில பாடசாலைகளில் குறிப்பாக உட் புறங்களில் இயங்கும் பாடசாலைகளில் சில ஆசிரியர்கள் காலை பத்து மணிக்கே செல்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

மேற்படி விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமெனப் பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர். (இ)

## நாளை

வைகாசி - 14

வியாழக்கிழமை

திதி: திருதியை

முன்னிரவு 09.25 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

முன்னிரவு10.42 வரை

சுபநேரம் 04.22 –05.52

ராகுகாலம்: 01.22 –02 52

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

## உதயவாக்கு

நட்பு, ஆண்டவன் அளித்த பரிசு; மனிதன் பெற்றுள்ள வரங்களில் தலை சிறந்தது.

-பெஞ்சமின் டிஸ்ரேலி

## சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி, மே 27

சாவகச்சேரி நகரில் சைக்கிள் திருட்டுக்கள் மீண்டும் இடம்பெற்று வருகின்றன.

(இ-31)

## நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 27

நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் இயங்கும் இலவச சித்தவைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

பெரும்பாலும் எக்ஸிமா, காய்ச்சல், ஆஸ்மா ஆகிய நோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் தொழில் வாய்ப்புகள்: கண்டறிய பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படவுள்ளன.

இதன் ஆரம்பமாக எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் யாழ். கண்டி வீதியில் அமைந்துள்ள பஸ்தியன் உணவக மண்டபத்தில் தகவல் பயிற்சிப் பட்டறை ஒன்று நடைபெறவுள்ளது.

இதில் பிரதேச செயலர்கள், வெளிநாட்டு உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பல்கலைக்கழகத் துணைவேந்தர், வங்கி முகாமையாளர்கள் ஆகியோர் பங்கு பற்றவுள்ளனர்.

இப்பயிற்சி நெறி குறிப்பிடத்தக்களவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான அத்திவாரமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பயிற்சி நெறியை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் இலங்கை - ஜேர்மன் ''செபே'' நிகழ்ச்சித்திட்டம், ''செபே'' பயிற்றுனர் சங்கம் ஆகியன இணைந்து நடத்துகின்றன.

''செபே'' நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டம் 1998 ஆம் ஆண்டு முதல் 2 ஆயிரமாம் ஆண்டு வரையான காலப்பகுதி ஆகும்.

இக் காலப் பகுதியில் ''செபே'' நிகழ்ச்சித்திட்டம் வடக்கு— கிழக்கு மாகாணங்களுக்கும் பரவலாக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் எத்தனையோ தொழில்களை ஆரம்பிப்பதற்கான வளங்கள் காணப்படுகின்றன. ஆனால் மக்களின் மனங்களில் நம்பிக்கையைத் தூண்டுவது எப்படி என்பதே இன்றைய பிரச்சினை ஆகும். ''செபே'' இதில் தனது பங்களிப்பை சிறப்புற ஆற்றவுள்ளது என்று கூறப்படுகிறது.

[இ-6]

# சுன்னாகம், பண்டத்தரிப்பு சந்தைகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 27

சுன்னாகம், பண்டத்தரிப்பு, மல்லாகம் சந்தைகள் விரைவில் திருத்தியமைக்கப்படவுள்ளன. ஐ. நா. அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் இச் சந்தைகளை திருத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த கால வலிசெயலின் போது இச்சந்தைகள் சேதமடைந்த நிலையிலிருந்தன. இதனால் மக்கள் தமது சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

வழமை போல இச்சந்தைகள் இயங்கினாலும் சந்தைக் கட்டடங்கள் சேதமடைந்த நிலையிலிருந்தமையினால் மக்கள் தமது உற்பத்திப் பொருள்களை பாதுகாப்பாக வைத்திருந்து சந்தைப்படுத்த முடியாத நிலையிருந்தது

தற்போது இச்சந்தைகளைத் திருததுவதற்கான நிதியினை ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் ஒதுக்கிக் கொடுத்துள்ளது. விரைவில் இச் சந்கைகளைத் திருத்துவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

## 30 விவசாயிகளுக்கு

# சிறுதானிய விதைகள் வீட்டுத்தோட்ட உபகரணம்

யாழ்ப்பாணம், மே 27

இருபாலை கிழக்கு விவசாய சம்மேளனப் பிரிவில் ''வெயர்'' ஸ்தாபனத்தின் உயிரியல் வள தோட்டச் செய்கைத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 30 விவசாயிகளுக்கு சிறுதானிய வகைகள் விதைகள் போன்றவற்றுடன் வீட்டுத்தோட்ட உபகரணங்களையும் வழங்கி ஊக்குவிப்புச் செய்யப்பட்டுள்ளதோடு பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதே பிரிவில் கடந்த 97, 98 காலபோக நெற்செய்கையின் போதும் 30விவசாயிகள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு விதை நெல் வழங்கப்பட்டதோடு பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

(இ-8)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்

13 - 01 - 1924

மறைவு

27 - 04 - 1998

திருமதி

நல்லையா பரமேஸ்வரி

27 – 04 - 1998 திங்கட்கிழமை காலஞ்சென்ற எமது பாசமிகு தாயாரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகள் சிறப்பாக நடைபெற உதவியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

27 – 05 – 98 இன்று புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

பிள்ளைகள்

பிரம்படி, கொக்குவில். (56314)


# நெடுந்தீவு மாதாந்த உதவிப்பணம்

யாழ்ப்பாணம் மே 27

நெடுந்தீவுத் தபாலகத்திலும் ஏனைய இரு உப தபாலகங்களிலும் கடந்த 15ஆம் திகதி தொடக்கம் பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி உதவிப்பணம் பெறுபவர்களில் சிலர் இன்னும் அதனைப் பெற்றுக் கொள்ளாமல் வேறிடங்களுக்குச் சென்றிருப்பதால், அத்தகையோர் உடனடியாக தமது அட்டைகளைச் சமர்ப்பித்து தமது பணத்தை அந்த அந்த அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு நெடுந்தீவுத் தபாலதிபர் என். தங்கராஜா கோரி உள்ளார்.

(இ)

# சைக்கிள் திருட்டு

சுன்னாகம், மே 27

சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயிலில் சப்பறத் திருவிழாவுக்கு வந்த பக்தர் ஒருவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

பூட்டப்படாத நிலையில் விட்டு விட்டு ஆலயத்துக்குச் சென்று திருவிழாவை முடித்துக் கொண்டு திரும்பிய போது. சைக்கிள் திருடப்பட்டதைத் தாம் அறிந்து கொண்டதாக சைக்கிளைப் பறிகொடுத்தவர் கவலையுடன் தெரிவித்தார்.

(ஐ-27)

# பவள விழா

யாழ்ப்பாணம், மே 27

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயத்தின் பவள விழா அடுத்தமாதம் நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

பவள விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவ, மாணவியர்களிடமிருந்து பல்வேறு ஆக்கங்கள் பெறப்பட்டு பவள விழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறுமென மேற்படி வித்தியாலய அதிபர் இ. கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

(இ-7)


# VACANCIES

The Save the Children Fund is an International Non Governmental Organisation working for the rights and welfare of children irrespective of nationality, race or religion. The following vacancies exist in SCF Office Madhu.

**The post holders will be responsible for finding his/her own accommodation in the district**

## 1. POST: FIELD OFFICER - MADHU

Field Officer will undertake three main areas of work;

1) Field and Project Work:– Undertaking surveys and assessment work, and assisting with ongoing monitoring and evaluation of programmes using PRA and other techniques, ensuring that children, their families and communities are actively involved in this Process.

2) Working alongside partner organisations to assist in the identifications of future partners, negotiating and liaising with NGO's and other organisations, representing SCF's values principles and policies.

3) Documenting and recording all work undertaken] and contributing to SCF internal and external reports.

**The successful candidates will have:**

1) an education to degree or equivalent level.

2) fluency in written and spoken English and the indigenous language predominate in that area.

3) excellent communication and report writing skill in English.

4) an understanding of NGO work and to undertake simple analysis of project.

5) a commitment to the active participation of children and their families in project development and implementation.

6) Willingness to travel with SCF in all districts if required.

Previous experience in field and project work, familiar with a child focused approach and computer skills are advantageous.

**Starting salary level approx. Rs. 12,000/- per month.**

## 2. POST: DISTRICT PROGRAMME ASSISTANT - MADHU

District Programme Assistant will undertake the following main areas of work

1) Field and project work: Undertaking field and project work including direct work with Children and communities, working alongside partner agencies, using PRA and other participatory methods.

2) Documenting and recording all work undertaken, and to make regular reports as requested whilst assisting and contributing to research projects.

3) Additional responsibilities: To articulate represent and use organisational values, principals and policies in the work. To contribute to the identification of possible patners for SCF.

**The successful candidates will have:**

1) fluency in spoken and written English including report writing skills and one indigenous language.

2) excellent communication and interpersonal skills.

3) an understanding of the nature of NGO work and to undertake simple analysis

4) a commitment to the active participation of Children and their families in project development and implementation.

5) willingness to travel with SCF in all districts. Previous experience in field and project work, familiar with a child focussed approach and computer skills are advantageous.

**Starting salary level approx.Rs.8,800/-per month. SCF retirement age is 60 years.**

**These posts will be a permanent position and subject to continued Department for International Development (UK) funding for SCF programme in Sri Lanka.**

**For application form and futher details please write to:**

District Coordinator,
SCF Office,
Jaffna.

**Closing date: Two weeks from this advertisement.**

**Only short-listed candidates will be informed the details of the interviews**

(C/3842)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஆவது கவச் வாகன படையணி

# வெள்ளியன்று கீரிமலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 27

இலங்கை இராணுவப் படையில் புதிதாக ஏழாவது (ஆமட் கார்) கவச வாகனப் படைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி இந்தப் படைப் பிரிவு கீரிமலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும்—

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவியாக இந்தப் படைப் பிரிவு இணைந்து செயற்படும் என்றும்—

பலாலி இராணுவ தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கவச வாகனப் படைப் பிரிவின் மூத்த அதிகாரிகளுள் ஒருவரும் முன்னாள் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் கருணாதிலக இந்தப் படைப் பிரிவை ஆரம்பித்து வைத்தார். (உ-3)

## வவுனியா பாடசாலையில் புலிகளின் 'நோட்டீஸ்'!

கொழும்பு, மே 27

வவுனியா நகரில் உள்ள தமிழ் மகாவித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இருவர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பலத்த பாதுகாப்புடன் இருக்கும் நகருக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவி துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தமை குறித்து படை வட்டாரங்கள் அதிர்ச்சி வெளியிட்டன.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலீஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரி நகரசபைக் கட்டடம், நூலகம் படையினர் வசமே தொடர்ந்து இருக்கும்

யாழ்ப்பாணம், மே 27

சாவகச்சேரி நகரசபைக் கட்டடம் மற்றும் பொது நூலக கட்டடங்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக மீண்டும் நகரசபையிடம் ஒப்படைக்க முடியாத நிலையிலிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மேற்படி கட்டடங்களை படையினரிடமிருந்து பெற்றுத்தந்து நகரசபை செயற்பாட்டுக்கு உதவுமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் ஒன்று எழுதப்பட்டது.

இக்கடிதத்திற்கு பதிலளிக்கையிலே பாதுகாப்பு அமைச்சு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

தற்பொழுது இக்கட்டடத்தில் சாவகச்சேரி பொலீஸ் நிலையம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டடம் படையினர் வசமுள்ளதால் சாவகச்சேரி நகரசபையும், பொது நூலகமும் தற்பொழுது தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. (இ-6-5)

## வீடியோக் கசற்றுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்கு ஒரு தொகை வீடியோக் கசற்றுக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை செஞ்சிலுவைக்குழுவின் தபால் சேவைக் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

திருமலைக்கு எடுத்துச் செல்லப்படும் இந்தக் கசற்றுக்கள் அங்கிருந்து உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

யாழ். பிரதம தபாலகத்தில் பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்டு பாதுகாப்புப் படையினரால் பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட வீடியோக் கசற்றுக்களே இவ்வாறு கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் தொடர்ந்தும் வீடியோக் கசற்றுக்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதால் இவ்வாறு அனுப்ப விரும்புவோர் இரு வாரங்களுக்கு முன்னதாகவே யாழ். பிரதம தபாலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (உ-7)


## அனைத்து வகுப்புகளிலும் புதிய பிரிவுகள்

ஜூன் 1 இல் ஆரம்பம்

ஒவ்வொரு வகுப்பிலும் மேலும் 10 மாணவர்களுக்கு மாத்திரம் புதிய அனுமதி வழங்கப்படும்.

இன்று முதல் ஜூன் 7வரை மட்டுமே!

The Express Institute
IRUPALAI KOPAY

— அதிபர்

(56308)


## உள்ளக் குமுறல்

திருமதி

**பானு கந்தவனச்செல்வன்**

B. Sc.

உடுவில் பள்ளியிலே ஆசானாய் வந்தீரே
உள்ளம் கவரும் அறிவுடன் எமை அணைத்தீரே
உம் அன்பும் பண்பும் உமை நினைக்கத் தூண்டுதே
உம் துயரச் செய்தி கேட்டு நாம் துவண்டோம்
எம் உள்ளக்கதறலை உமக்குகாணிக்கையாக்குகிறோம்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்

97, 98 கணித உயிரியல் மாணவிகள்,
யா/உடுவில் மகளிர் கல்லூரி.

(56322)

## பொன்விழா நிகழ்வில்

யாழ்ப்பாணம், மே 26

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தின் பொன்விழாத் தொடரில் நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை மாணவியர்கள் வழங்கும் ''ஞானப் பழநி'' என்ற நாட்டிய நாடகமும், ஜெயராம் வழங்கும் வயலின் இசையும் இடம் பெறவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விழாவுக்கு கா. சி. நடராஜா தலைமை வகிப்பார்.

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி மற்றும் கிராம அலவலர் க. நித்தியானந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (இ-135-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 27

காங்கேசன்துறை மாவட்டத்தைச் சேர்ந்த சாரணத் தலைவர்கள், குருளைச் சாரணர் தலைவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (இ-3)

★ ★ ★

சமுர்த்தி உத்தியோகஸ்தர்களின் நியமனம் மற்றும் சம்பளம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக நாளை மாலை 3.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது.

## தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர் தபால்கள் அடங்கிய — 64 தபாற் பொதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சப்பல் மூலம் யாழ். எடுத்துவரப்பட்டன.

இதேவேளை யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 15 தபாற் பொதிகள் நேற்றையதினம் செஞ்சிலுவைக் குழுவின் கப்பல்மூலம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (உ-7)

## தமிழ் எம். பி. இன்று திருமணம்

மட்டக்களப்பு, மே 27

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான சட்டத்தரணி கே. துரைராஜசிங்கம் மட்டக்களப்பில் டாக்டராகப் பணிபுரியும் ஆர். கலையரசியை இன்று காலை திருமணம் செய்கின்றார். மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தில் இத்திருமணம் நடைபெறுகின்றது.

கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி எஸ். ரவீந்திரராஜாவின் மகளான டாக்டர் கலையரசியும் அவரது குடும்பத்தவர்களும் கடந்த 35 ஆண்டுகளாக மட்டக்களப்பில் வசித்து வருகின்றனர். (உ-21)

## சமய சந்நிதிகளில்

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் தொடர்ந்து சுவாமி உள்வீதிவலம் வரும் உற்சவமும் நடைபெறும். (இ)

★ ★ ★

வேலணை மேற்கு அருள்மிகு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

எதிர்வரும் 7 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 9 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த் திருவிழாவும். 8 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7)

★ ★ ★

பத்தாவத்தை புனித நேரியார் திருநாள் பங்குத் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 31 ஆம் திகதி காலை 7 மணிக்கு பாடல் திருப்பலியுடனும், திருச்சுரூப சுற்றுப் பிரகாரத்துடனும் திருநாள் முடிவடையும். (இ)

★ ★ ★

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் கும்பாபிஷேக தின சகஸ்ர சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வரபூசையும், மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் விசேட நிகழ்ச்சிகளாக இடம்பெறவுள்ளன. (இ-7)

★ ★ ★

இருபாலை கட்டைப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலய புனருத்தாரண மஹா கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகிஉள்ளன. நாளை காலை 7 மணி முதல் மாலை 2 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்துதலும்—

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மஹா கும்பாபிஷேகமும் இடம்பெற உள்ளன. (இ-9)

## கைதுசெய்யும் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, மே 27

இராணுவ சேவையிலிருந்து விலகித் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய்களையும் கைதுசெய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (உ-21)

## அ. அட்டைகள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்டத்துக்கான 4 ஆயிரம் அடையாள அட்டைகளை ஆள்பதிவுத் திணைக்களம் கொழும்பில் உள்ள யாழ். செயலக இணைப்பதிகாரி க. மருதவாணரிடம் கையளித்துள்ளது.

இந்த அடையாள அட்டைகள் உடன் விமானமூலம் யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன. (உ-3)

## படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், மே. 27

கோண்டாவில் கிழக்கு, இருபாலை மேற்கு ஆகிய பகுதிகளும், யாழ்ப்பாணம் — பாஷையூர் பகுதியும் நேற்று படையினரின் தீவிர தேடுதல், சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டன. (உ-7-139)

## மெய்வன்மை நிகழ்ச்சிகள்

யாழ். வலயம் ஒன்று, இரண்டு பாடசாலைகளுக்கிடையிலான உப-மாகாண (மாவட்ட) மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வலய மட்டப் போட்டிகளில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்கள் உபமாகாணப் போட்டிகளில் பங்குபற்றுவர்.

பங்குபற்றும் போட்டியாளர்கள் உண்மைப் பிறப்புச் சான்றிதழையும், தேசிய அல்லது தபால் அடையாள அட்டையையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## மரண அறிவித்தல்

## திருமதி ஜீவமலர் இராசையா

பண்டத்தரிப்பு தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்தவரும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி முன்னாள் உப அதிபருமான திருமதி ஜீவமலர் இராசையா 25-05-98 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய தபால் அதிபர் இராசையாவின் அன்பு மனைவியும், தயாசீலனின் (சுவிட்சர்லாந்து) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) என். ஆர். பாலசிங்கம், இரத்தினசிங்கம் (ஆஸ்திரேலியா — முன்னாள் அதிபர், யாழ். மத்தியகல்லூரி), திருமதி இராசமலர் பிளான்சாட் (கனடா — முன்னாள் ஆசிரியை, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27 – 05 – 98) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள பிலிப்ஸ் நேர்சிங்ஹோம் கட்டடத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
S.C. மனுவேற்பிள்ளை
முகாமையாளர்,
புற்றுநோய் தடுப்புச்சங்கப் பணிமனை.

(56319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் நாடு**

# சித்தமருத்துவகல்லூரியில் 5 இலங்கையருக்கு இடம்

யாழ்ப்பாணம், மே 27

தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவத்தில் 3 வருட பட்ட மேற்படிப்பு கற்கை நெறிக்கு இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேருக்கு இடமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கல்லூரியில் தற்சமயம் மேற்படிப்பை மேற்கொண்டுள்ள யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்ற முன்னாள் தலைவர் டாக்டர் நா. வருணகுலேந்திரன் தமிழக அதிகாரிகள் பலருடன் நடத்திய பேச்சுக்களையடுத்து இந்த வசதி செய்யப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டுக்கு ஐந்து மாணவர்களுக்கு இடமளிக்க அனுமதிக்கப்படவுள்ளதால் அது தொடர்பான விளம்பரம் வெளியானதும் இலங்கை மாணவர்கள் உடன் விண்ணப்பிக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (இ-3)

**தலதாமாளிகை புனரமைப்பு:**

# அமைச்சரின் கூட்டத்தை பீடாதிபதிகள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, மே 27

தலதாமாளிகையை புனர்நிர்மாணம்செய்வது தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்று கூட்டியிருந்த கூட்டத்தை மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகள்பகிஷ்கரித்தனர்.

தலதாமாளிகையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி குறித்து ஆராய விசாரணைக்குழு ஒன்றை அரசாங்கம் தங்கள் ஆலோசனையின்றி அமைத்ததைக் கண்டிக்கும் வகையிலேயே பீடாதிபதிகள் நேற்றைய கூட்டத்தைப் பகிஷ்கரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன்விஜயரத்தினவும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. (உ-10 3)

## புத்தர்...

(முதலாம் பக்கத் தொடர்)

விகாரை ஒன்றுக்குள் நுழைந்த ஆயுதம் தாங்கிய அந்தக் கோஷ்டி அந்த விகாரையின் விகாராதிபதியையும், அவரது உதவியாளரையும் கட்டிப்போட்டுவிட்டு, அங்கு இருந்த — இரண்டு அடி உயரமான — தங்கமுலாம் பூசப்பட்ட — புத்தர் சிலையை அபகரித்துக்கொண்டு தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


உ

சித்தன்கேணி — பெரியவளவு

ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில்

**மஹோற்சவம்**

கொடியேற்றம்: **30 - 05 - 98** சனிக்கிழமை பகல் 11 00 மணி

தேர்த்திருவிழா: **08 - 06 - 98** திங்கட்கிழமை காலை 9.00 மணி

தீர்த்தத்திருவிழா: **09 - 06 - 98** செவ்வாய்க்கிழமை பகல் 10 00 மணி

கொடியிறக்கம்: **09 - 06 - 98** செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி

வசந்த மண்டபப் பூசை: காலை 11 00 — 4.30 மணி

வருடாந்த சங்காபிஷேகம்:

**13 - 07 - 98** திங்கட்கிழமை பகல் 10.00 மணி

சித்தன்கேணி. — ஷெ பரிபாலன சபை

(56302)



துரித கதியில் உங்கள் கலர்படச்சுருள்களை கழுவிப் பெற்றிட

யாழ். நகரில்!

**சுப்பஸோ கலர்படச் சேவை**

(KONICA PHOTO EXPRESS COMPUTER LATEST -- 1997 மெஷின் மூலம்)

சகல அளவுகளிலும் பிரதியாக்கம் செய்து கொடுக்கும் இடம்

**சுப்பஸோ கலர்படச் சேவை**

100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தென்மராட்சி மக்களின் நலன் கருதி இன்று 27-05-98 புதன் முதல் கலர்ப்படச் சுருள்களின் முகவராக

**டெல்கா DELKA**

ஸ்தாபனத்தாரை நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**டெல்கா DELKA**

பஸ் நிலையம், சாவகச்சேரி.

(மீன் சந்தை அருகில்)

கட்டணங்களில் மாற்றமில்லை

(சி/3848)


**நொச்சியாகமம், குளியாப்பிட்டி, களுத்துறை**

# 3 'ரெலிகொம்' அலுவலகங்களிலும் ஒரே ரகக் குண்டுகளே வெடித்தன

கொழும்பு, மே 27

ஒரு மாத காலத்திற்குள் நொச்சியாகமம், குளியாப்பிட்டி மற்றும் களுத்துறை ரெலிகொம் மத்திய நிலையங்களில் வெடிக்க வைக்கப்பட்ட குண்டுகள் யாவும் ஒரே ரகத்தைச் சேர்ந்தவை என அரசாங்கத்தின் மூத்த இரசாயனப் பகுப்பாய்வாளர் டபிள்யு ஜி. டீ. எஸ். குணதிலக தெரிவித்துள்ளார்.

தொலைத்தொடர்பு மத்திய நிலையங்கள் மீதான தாக்குதல்களை ஒரே குழுவினரே மேற்கொண்டிருக்கலாம் எனச் சந்தேகிக்க முடிகிறது எனவும் அவர் தெரிவித்தார். (உ-10)

## இளைஞர் விடுதலை

நெல்லியடி, மே 27

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் கடந்த மாதம் 27 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து விடுதலையானார். செம்பியன்பற்று தெற்கைச்சேர்ந்த கனகசபை கல்யாணகுமார் (வயது 23) என்னும் இளைஞனே விடுதலையானவராவார்.

பலத்த தாக்குதல்களினால் நோய்வாய்ப்பட்ட இந்த இளைஞர் தற்பொழுது மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார். (உ-109)

## ஆனைக்கோட்டையில்..

[முதலாம் பக்கத் தொடர்]

அடிப்படையில் அப்பகுதியை இலக்கு வைத்து படையினர் நகர்ந்ததாகவும்—

அப்போது— காலை 10-00 மணியளவில் — படையினர் தரப்புக்கும்— புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும்—

படையினர் புலிகளின் பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் —

சண்டையில் 'ஐயர்' என அழைக்கப்படும் புலிகளின் மூத்த தலைவர் ஒருவர் உட்பட இருவர் காயமுற்றதை ஊர்ஜிதப்படுத்த முடிந்ததாகவும் —

படைத் தரப்புக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் —

பலாலி படை வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன. (உ-15-139)

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த வழக்கின் குற்றப்பத்திரம் 493 பக்கங்களைக் கொண்டுள்ளது. சந்தேகநபர்கள் மீது 12 குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் சாட்சிகளாக 16 தமிழர்கள் உட்பட 430 பேர் அழைக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தோனிப்பிள்ளை றொபர்ட் மக்ஷலின் குணராஜ், சுவாமிமுத்து லோகநாதன், சித்திரசேனன் திருமால், யோகராசா ஆரோக்கியராஜா, சின்னப்பா செல்வராஜா, கமல்குமார் பிரதாபன், சுப்பையா ஸ்ரீதரன் ஆகியோர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். (உ-10-21)

## அகதிகளை..

(முதலாம் பக்கத் தொடர்)

இருந்து மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியுடன் மோதியது.

அந்த பஸ்ஸில் பயணம் செய்தவர்தளில் 4 அகதிகள் காயமடைந்தனர். அவர்கள் செட்டிகுளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து [illegible] கோணமலை நோக்கிப் புறப்படும்.

**இலங்கை கிரிக்கெட் அணி:**

# துணைக் கப்டனாக சனத்! அரவிந்த பதவியிழப்பு!!

கொழும்பு, மே 27

1992 ஆம் ஆண்டு முதல் இலங்கை கிரிக்கெட் அணியின் துணைக் கப்டனாக விளங்கிய அரவிந்த டி சில்வா அந்தப் பதவியில் தொடரும் வாய்ப்பை இழந்துவிட்டார். புதிய துணைக் கப்டனாக சனத்ஜெயசூரிய நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

நியூஸிலாந்துக்கு எதிராக நடைபெறவிருக்கும் 3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் கப்டனாக அர்ஜுன் ரணதுங்காவும் —

துணைக் கப்டனாக சனத் ஜெயசூரியாவும்— அறிவிக்கப்பட்டுள்ளனர்.

14பேர் கொண்ட இலங்கை அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. றொசான் மகாநாம, குமார தர்மசேன ஆகியோர் அணியில் இல்லை. பாடசாலை கிரிக்கெட் வீரரான மாலிக பண்டார (வயது 18) அணியில் இடம் பெற்றுள்ளார். (உ-8)

## மற்றோர்...

[முதலாம் பக்கத் தொடர்]

அவரைக் கலைத்துச் சென்ற பொலீஸார்அவரைக் கைது செய்தனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை கொழும்பு நீதிமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற சமயம் இரு சிப்பாய்கள்தப்பி ஓடியிருந்தனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (உ-3-6)

## உதவும்..

(முதலாம் பக்கத் தொடர்)

டுள்ளார்.

இலங்கை எதிர்பார்க்கும் உதவி குறைவடையலாம் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி அன்ரன்ஒப்தபேச்சே தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பு, ஜேர்மன், ஜப்பான் நாடுகளின் நாணயங்களின் பெறுமதி வீழ்ச்சி ஆகியனவே இதற்கு முக்கிய காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (உ-6)

## ஒப்பந்த அடிப்படையில் நியமனம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு நிறுவனம் வாகன சாரதிகள் மற்றும் கூலியாட்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவுள்ளது.

ஒப்பந்த காரர்கள் 123/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்றமுகவரியுடன்தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (உ-7)

## யாழ். மேயர்...

(முதலாம் பக்கத் தொடர்)

''இவர்கள் இல்லாத நிலையில் கட்சியின் அரசியல் குழு அவசர அவசரமாகக் கூடி இந்த நியமனத்தைச் செய்ய வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

''திருமதி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டதால் எழுந்த அதிர்ச்சி இன்னும் குறையவில்லை. அதற்குள் ஏன் இந்த அவசரம்?

''அரசு நடத்திய தேர்தலில் அவசரப்பட்டுக் குதித்ததால் வந்த நெருக்கடி நிலைதான் இது. அதேபோன்று இப்போதும் அவசரப்பட்டு முடிவெடுத்திருக்கின்றார்கள் போலும்.

''யாழ். மாநகரசபைதேர்தலை ஒட்டி கட்சியின் வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்ட போதும் அவசரப்பட்டு பத்திரிகையாளர்களுக்கு கருத்து வெளியிட்டதால் கட்சியே வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று.

''திருமதி யோகேஸ்வரனின் மறைவு ஏற்படுத்திய அதிர்ச்சிக்கு மத்தியில் இந்த நியமனம் அவசரப்பட்டுச் செய்ய முற்படுவது, திருமதி யோகேஸ்வரனைச் சுட்டுக் கொன்றவர்களுக்கு சவால் விடுவது போன்ற தோற்றத்தையே ஏற்படுத்தும். கட்சியின் நலனுக்கு இந்தப் போக்கு உகந்ததா?

''மட்டக்களப்பில் உள்ளூராட்சி சபைகள் ஓரளவு இயங்குகின்றன. இங்குள்ளது போன்ற குழப்ப நிலைமை அங்கில்லை. அத்தகைய உறவு நிலையை இங்கு ஏற்படுத்த முயற்சிக்காமல்— சவாலுக்கு சவால் விடுவது, கூட்டணி போன்ற மிதவாதக் கட்சிக்கு பொருத்தமற்றது, புத்திசாதுரியமற்ற செயலும் கூட.

''அத்துடன்—

''யாழ்ப்பாணத்துக்குரிய மேயரை யாழ்ப்பாணத்திலிருந்தே தெரிவு செய்ய வேண்டும், இறக்குமதி செய்யக் கூடாது.

''ஏற்கனவே ஒரு தடவை மக்கள் மத்தியில் — மக்களுடன் யாழ். நகரில் — அண்மைக் காலத்தில் வசிக்காத ஒருவரை நியமித்து கையைச் சுட்டுக் கொண்டாகி விட்டது. இனிமேலும் அப்படிச் செய்யக்கூடாது. யாழ். மக்கள் மத்தியில் இருந்தே ஒருவரைத் தெரிவுசெய்திருக்கலாம் — கொழும்பிலிருந்து அனுப்புவதை விட.

''தேர்தல் நடந்து முடிந்து புதிய மேயர் பதவியேற்பதற்குச் சுமார் மூன்று மாதங்கள் காலதாமதம் ஆகின. அப்போது அத்தாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்காமல் இழுத்தடிப்புக்குத் துணைபோனவர்கள் இப்போது ஒரு மேயர் சுட்டுக் கொல்லப்பட்டு ஒரு வாரத்துக்குள் அடுத்த மேயரை அனுப்புவதற்கு அவசரப்படுவது ஏன் என்பது புரியவில்லை?''

— இவ்வாறு கூட்டணியின் அதிருப்தி வட்டாரங்கள் சில உதயனுக்குக் கருத்து வெளியிட்டன.

ஒருசிலரின் கைப்பாவையாகக் கூட்டணி இயங்குவதாகவும் —

வடபகுதி சம்பந்தமான விடயங்களில் கிழக்குத் தலைவர்களின் ஆலோசனைகள் கருத்துக்குக் கூடக் கேட்பது இல்லை எனவும் —

அந்த வட்டாரங்கள் மேலும் கவலை -தெவித்துள்ளன. (உ1-3ரி2)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org